பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:66 | 08.02.2024 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054






## பாகிஸ்தானில் பதற்றம் இணைய சேவை துண்டிப்பு

பாகிஸ்தானில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறுவதால் இணைய சேவை, தொலைபேசி ஆகியவை துண்டிக்கப்பட்டன.

இன்று காலை வாக்குச்சாவடிக்கு அருகில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் நான்கு பொலிஸார் மரணமானார்கள்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் வாக்களிப்பு மாலை 5 மணிக்கு முடிவடையும். தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி சில பகுதிகளில் வாக்குப்பதிவு நீட்டிக்கப்படலாம். வாக்காளர்கள் தங்கள் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களிப்பார்கள் - ஒன்று கூட்டாட்சி மற்றும் மற்றொன்று மாகாணம். மத்திய சட்டமன்றத்திற்கு 5,121 வேட்பாளர்களும் மாகாணங்களுக்கு 12,695 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

ஊசல் குற்றச்சாட்டில் சிறையில் இருக்கும் சரத் பொன்சேக சிறைச்சாலையில் வாக்களித்தார்.

பலூசிஸ்தான் மாகாணத்தில் வேட்பாளர்களின் அரசியல் அலுவலகங்கள் மீது புதன்கிழமை நடத்தப்பட்ட இரண்டு தாக்குதல்களில் குறைந்தது 24 பேர் கொல்லப்பட்டனர்.

## அரசியல் கட்சிகளுக்கு அழைப்புவிடும் மைத்திரி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன் எனவும் நாட்டை கட்டியெழுப்பும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

“பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை 2022 ஆம் ஆண்டு முதல் வலியுறுத்துகிறோம்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உண்மைத் தன்மையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள்.

நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியுடன் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.” என்றார்.

## தீக்கிரையான தும்புத் தொழிற்சாலை



கிளிநொச்சி - கோணாவிலில் மின்னொழுக்கு காரணமாக தும்புத் தொழிற்சாலை ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியதால் சுமார் 35 இலட்சத்துக்கும் அதிகமான நஷ்டம் ஏற்றுபட்டுள்ளதாக உரிமையாளர் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு வாகனம் பழுதடைந்தமையால் தண்ணீர் பவுசர், அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதேவேளை சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# காரைதீவில் இரண்டாம் கட்ட உதவி வழங்கிவைப்பு



காரைதீவு பிரதேசத்தில் உள்ள வாழ்வாதாரம் குன்றிய 50 குடும்பங்களுக்கு புளொட் அமைப்பால் நேற்று புதன்கிழமை நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு கடந்த மாத நடுப்பகுதியில் புளொட் அமைப்பு முதல் கட்டமாக நிவாரண பொதிகளை வழங்கி இருந்தது.

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப.ரவிச்சந்திரனின் (சங்கரி) சிந்தனையின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அமைப்பின் ஜேர்மன் கிளையைச் சேர்ந்த தோழர்கள் நிதி பங்களிப்புகளை வழங்கினார்கள்.



# ஊனமுற்றோர் முதியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு

ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக பாதிப்புக்கான கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

5,000 ரூபாயாக இருந்த ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக உதவித்தொகை 7,500 ரூபாயாகவும், 2,000 ரூபாயாக இருந்த முதியோர் உதவித்தொகை 3,000 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தற்போது நிவாரணப் பயனாளி குடும்பங்களில் உள்ள ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக பாதிப்புக்கான கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்கள் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அடையாளம் காணப்பட்டு, அதன் பின்னர் ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அவர்களுக்கும் இந்த அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.


கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# சஜித்தைக் கைவிட்ட கட்சி உறுப்பினர்கள்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிக்க ஆயத்தமானார், அப்போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். மக்கள் சக்தி உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, குமார வெல்கம, பைசல் காசிம், ஏ.எச்.எம்.பௌசி, வடிவேல் சுரேஸ், இஷாக் ரஹ்மான் ஆகியோர் சஜித்தின் பின்னால் செல்லாது சபையில் தங்கியிருந்து ஜனாதிபதியின் உரையை செவிமடுத்தனர். சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் வெளியேறாது ஜனாதிபதியின் உரையைக் கேட்டார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வதில்லை என மக்கள் சக்தி கட்சி தீர்மானித்திருந்தது. கட்சியின் தீர்மானத்தை பொருட்படுத்தாமல் ஜனாதிபதியின் உரையை சிலர் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் உண்மையில் ஜனாதிபதியின் உரையில் அக்கறை கொண்டு சபையில் இருக்கவில்லை. கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சபையில் இருந்தவாறு ஜனாதிபதி ரணிலின் உரையைச் செவிமடுத்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜயசேகர, சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் உட்பட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா, பாராளுமன்ற கலாநிதி ஹரினி அமரசூரிய, தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையை சமர்ப்பித்தபோது சபையில் இருந்தனர். உத்தர லங்கா சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, அபே ஜன பல கட்சியைச் சேர்ந்த வண. ரத்ன தேரர் ஆகியோரும் சபையில் காணப்படவில்லை.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா, லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் சபையிலிருந்து வெளியேறினர். 28 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட தேநீர் விருந்தில் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவு அறைக்குள் கலந்து கொண்டனர்.

சபாநாயகர், முன்னாள் அமைச்சர் ஹெகலிய ஆகியோருக்கு எதிராகவும் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்பட உள்ளது, மருந்து இறக்குமதியில் ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டி ஹெகலியவுக்கு எதிராகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாப்பிரேரணை 113 உறுப்பினர்களின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டது. அந்த 113 பேருக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழுங்கப்படவுள்ளது. அந்த 113 பேரும் இன்று சஜித்தை எதிர்ப்பவர்களும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

# சூடானில் உக்ரேனிய சிறப்புப்படையணி



சூடானின் கிளர்ச்சியாளர் விரைவு ஆதரவுப்படைகளுடன் (RSF) இணைந்த ரஷ்ய வாக்னர் கூலிப்படையினருக்கு எதிராக நாட்டின் இராணுவத்திற்கு ஆதரவாக சூடானில் உக்ரேனிய சிறப்புப் படைகள் செயல்படுவதாகக் கூறப்படுகிறது.

க்வி போஸ்ட் ஒரு குறும்படத்தை வெளியிட்டது, இது உக்ரேனிய இராணுவ உளவுத்துறையின் ஆதாரங்களிலிருந்து வந்தது, இது இரகசிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பானது, பிடிபட்ட ஒரு ரஷ்ய கைதி இரண்டு ஆபிரிக்க மனிதர்களுடன் விசாரிக்கப்படுவதைக் காட்டுகிறது.

ரஷ்ய சிப்பாய், தான் "பி.எம்.சி வாக்னரைச் சேர்ந்தவர்" என்றும், மத்திய ஆபிரிக்கக் குடியரசிலிருந்து சூடானுக்கு வந்ததாகவும் அங்கு ரஷ்யக் குழுவைச் சேர்ந்த போராளிகள் சுமார் 100 பேர் கொண்ட "உள்ளூர் அரசாங்கத்தைக் கவிழ்க்க" வந்ததாகவும் கூறுகிறார்.

## ஒரு வருடத்தின் முன்னர் பிடிக்கப்பட்ட விமானி விடுதலை



இந்தோனேசியாவின் மேற்கு பப்புவா பிராந்தியத்திலுள்ள கிளர்ச்சியாளர்கள் தங்கள் சுதந்திர இயக்கத்திற்காக பேரம் பேசுவதற்காக ஒரு வருடத்திற்கு முன்பு பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்ட நியூஸிலாந்து விமானியை விடுவிப்பதாகக் கூறியுள்ளனர்.

மேற்கு பப்புவா தேசிய விடுதலை இராணுவத்தின் (TPN-PB) பொதுப் பணியாளர்களின் தலைவர் டெரியனஸ் சாட்டோ, மனிதகுலத்தைப் பாதுகாக்கவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் விமானி விடுவிக்கப்படுவார் என்று ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

மெஹர்டென்ஸ் எப்போது விடுவிக்கப்படுவார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

# இந்தியாவில் சைபர் குற்றங்கள் அதிகரிப்பு

இந்தியாவில் 2022 ஆம் ஆண்டு சைபர் குற்றங்கள் 24 சதவிகிதத்திற்கும் அதிகமாகவும் 2020 ஆம் ஆண்டைவிட 31 சதவிகிதத்திற்கும் அதிகமாகவும் அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகள் தெரிவிக்கின்றன.

2022 ஆம் ஆண்டில், அதிகபட்சமாக 15,297 சைபர் குற்றங்கள் தென் மாநிலமான தெலுங்கானாவில் பதிவாகியுள்ளன, அதைத் தொடர்ந்து தென் மாநிலமான கர்நாடகாவில் 12,556 குற்றங்களும், வட மாநிலமான உத்தரபிரதேசத்தில் 10,117 குற்றங்களும் பதிவாகியுள்ளன.

புதன்கிழமை என்.சி.ஆர்.பி தரவை மேற்கோள் காட்டி, மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ரா, நாட்டில் நடக்கும் அனைத்து வகையான சைபர் குற்றங்களையும் ஒருங்கிணைந்த மற்றும் விரிவான முறையில் சமாளிக்க மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# அஜர்பைஜான் ஜனாதிபதித் தேர்தலில் இல்ஹாம் அலியேவ் முன்னிலை

அஜர்பைஜான் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார் என்று புதன்கிழமை வெளியான பல கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. Azerbaijan's Citizens' Labour Rights Protection League, Oracle Advisory Group ஆகிய அமெரிக்க அமைப்பான Oracle Advisory Group நடத்திய கூட்டு கருத்துக் கணிப்பின்படி, Aliyev 93.9 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளார்.

சமூகவியல் ஆராய்ச்சிக்கான அஜர்பைஜான் மையம் வெளியிட்ட தனியான கருத்துக் கணிப்பு, தற்போதைய ஜனாதிபதி 92.4 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக ரஷ்யாவின் RIA நோவோஸ்டி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பலூசிஸ்தான் குண்டுவெடிப்பில் 26 பேர் பலி

பாகிஸ்தான் நாட்டில் இன்று ( 08 ஆம் திகதி) பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நேற்று பலூசிஸ்தான் மாகாணத்தில் அடுத்தடுத்து 2 இடங்களில் குண்டுவெடிப்பு நடந்தன. இதில் 26 பேர் பலியாகினர். பலர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகிறது.

பிஷின் பகுதியில் அஸ்பந்தியார் காக்கர் தேர்தல் அலுவலகம் வெளியே முதல் குண்டு வெடித்தது. முதல் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து கீலா சைபுல்லா பகுதியில் மற்றொரு குண்டு வெடித்தது.



தேர்தல் அலுவலகத்திற்கு வெளியே நடந்த குண்டுவெடிப்பில், 12 பேர் கொல்லப்பட்டதாக துணை ஆணையாளர் யாசி பஜாய் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் 19 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததுடன் இரண்டு படகுகளையும் கைப்பற்றியது.

கைது செய்யப்பட்ட 19 மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ள குறித்த மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# ஜகத் பிரியங்கர சத்தியப்பிரமாணம்

ஜகத் பிரியங்கர இன்று (08) பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

விபத்தில் உயிரிழந்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவினால் வெற்றிடமான ஆசனத்திற்கு ஜகத் பிரியங்கர சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



# மூன்று பொலிஸ் அதிகாரிகள் பணி இடைநீக்கம்

ஆட்டுப்பட்டி தெரு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 3 உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜிந்துபிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்கள், வெளிநபர் ஒருவர் விஷம் அடங்கிய பால் பொதியை வழங்கிய சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, பாலை அருந்தி மயக்கமடைந்த சந்தேக நபர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி ரணில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம்



அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய அறக்கட்டளை மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இன்று அதிகாலை அவுஸ்திரேலியா நோக்கி புறப்பட்டார்.

# பஸ்ஸில் பாலியல்தொல்லை கொடுத்தவர்கள் கைது

பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கும் பாலியல் தொல்லை கொடுப்பவர்களை கண்டறியும் விசேட நடவடிக்கையில் நேற்று (07) மாத்திரம் 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது போக்குவரத்து சேவையில் பாலியல் தொல்லை கொடுத்த 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர திருட்டு சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 7.00 மணி வரையிலும் சிவில் உடையில் பல பொலிஸ் குழுக்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவும் ஹேக்கர்ஸ்



வரி செலுத்துவோரை அடையாளம் காண உள்நாட்டு வருவாய் துறை வழங்கிய டின் எண் தொடர்பில் வங்கிச் சேவைகளுக்காக என வங்கி அதிகாரிகள் போன்று சூட்சமான அதிநவீன முறையில் மக்களை ஏமாற்றி தனியார் வங்கிக் கணக்குகளில் பணத்தை மோசடி செய்யும் ஹேக்கர் கும்பல் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதாக குருநாகல் மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மோசடி கும்பலிடம் இலட்சக்கணக்கான ரூபாய் பணத்தை இழந்தவர்கள் குறித்த தகவல் கிடைத்துள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவிக்கிறது.

இந்த மோசடி கும்பல் நேற்று (07) குருநாகல் நகரிலுள்ள பிரதான கல்வி நிறுவனமொன்றில் கடமையாற்றும் தேரர் ஒருவரின் கணக்கில் இருந்து 208,000 ரூபாவை கொள்ளையடித்துள்ளதாக தேரர் குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் மீது தாக்குதல்

சாவகச்சேரி மந்துவில் பகுதியில் வீதி மின்விளக்குகளை களவாட முயன்ற கும்பலை தடுக்க முற்பட்ட, சாவகச்சேரி பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கு.குகானந்த தாக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மந்துவில் பகுதி வீதியில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த வீதி மின் குமிழ்களை சிலர் திருடியபோது அதனை அவதானித்தவர்கள் சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் கு.குகானந்தனுக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் இடத்திற்கு வந்த முன்னாள் உறுப்பினர், மின் விளக்குகளை திருடியவர்களிடம் கேட்டபோது, அவர்கள் உறுப்பினர் மீது கொட்டனால் கடுமையாக தாக்கிவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# UNDER 19 WC முடிசூடா மன்னன் இந்தியா

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் விளையாட இந்தியா தகுதி பெற்றுள்ளது.

நடப்பு சம்பியனான இந்திய லீக் சுற்றில் பங்களாதேஷ், அயர்லாந்து அமெரிக்கா ஆகியவற்றைத் தோற்கடித்து சூப்பர் 6 சுற்றுக்கு சென்றது. சூப்பர் 6 சுற்றில் வலுவான நியூஸிலாந்தையும், நேபாளை எளிதாகவும் தோற்கடித்த இந்தியா அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதல் அரையிறுதியில் தென்னாபிரிக்கா நிர்ணயித்த 245 ஓட்டங்களை துரத்திய இந்தியா போராடி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

பேனோனி நகரில் நடைபெற்ற முதலாவது அரை இறுதிப் போட்டியில் 4 விக்கெட்டுகளை இழந்து இந்தியா தடுமாறிய போது கப்டன் உதய் சஹரன் 84, சச்சின் தாஸ் 95 ஓட்டங்கள் குவித்து தென்னாபிரிக்காவை அதனுடைய சொந்த மண்ணில் தோற்கடிக்க உதவினர்.

19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண வரலாற்றில் 9 ஆவது முறையாக இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. கடந்த 1988 முதல் 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ணப் போட்டி நடைபெறுகிறது. அப்போதிலிருந்து இந்த வருடத்தையும் சேர்த்து இதுவரை மொத்தம் 15 போட்டிகள் நடைபெற்றுள்ளன. அந்த 15 தொடர்களில் இந்தியா தான் அதிகபட்சமாக 9 முறை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. குறிப்பாக 2016, 2018, 2020, 2022, 2024 என கடைசியாக நடந்த 5 உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளுக்கு தொடர்ச்சியாக இந்தியா தகுதி பெற்று சாதனை படைத்துள்ளது.

தகுதி பெற்ற 8 இறுதிப் போட்டிகளில் 2000, 2008, 2012, 2018, 2022 ஆகிய 5 வருடங்களில் முறையே முகமது கைப், விராட் கோலி, உமுக் சந்த், பிரிதிவி ஷா, யாஷ்துள் ஆகியோரின் தலைமையில் இந்தியா 5 சம்பியன் பட்டங்களை வென்றுள்ளது. அந்த வகையில் அண்டர்-19 உலகக்கோப்பையை அதிகமுறை வென்ற அணி என்ற உலக சாதனையும் இந்தியா படைத்துள்ளது. அதிக பட்சமாக அவுஸ்திரேலியா 3 கோப்பைகளை வென்றுள்ளது

அந்த வகையில் சீனியர் கிரிக்கெட்டில் 6 உலகக் கோப்பைகளை வென்ற அவுஸ்திரேலியாவை போல அண்டர்-19 கிரிக்கெட்டில் இந்தியா முடிசூடா அரசனாக திகழ்கிறது என்றே சொல்லலாம்.




# நன்றி மறக்காத தல டோனி

கிரிக்கெட்டில் இருந்து டோனி ஓய்வு பெற்றாலும் அவரைப் பற்றிய செய்திகள் அவ்வப்போது வைரலாகிறது. 2004ஆம் ஆண்டு அறிமுகமான போது வைத்திருந்த நீளமான முடிகளுடன் கூடிய ஹேர் ஸ்டைலுடன் டோனிபயிற்சி எடுக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அதைவிட தற்போது அவர் “ப்ரைம் ஸ்போர்ட்ஸ்” எனும் புதிய ஸ்பான்சரின் பெயரை தன்னுடைய துடுப்பில் ஸ்டிக்கராக ஒட்டியிருப்பதும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஆரம்ப காலங்களில் கிரிக்கெட்டில் விளையாடும்போது தோனிக்கு நிறைய நண்பர்கள் உதவி செய்துள்ளார்கள். அதில் பாம்ஜித் சிங் எனும் நெருங்கிய நண்பர் டீனியின் துடுப்புக்கு முதல் முறையாக ஸ்பான்சர்ஷிப் வாங்கி கொடுத்தார். அது பற்றிய விபரத்தை 2016 ஆம் ஆண்டு வெளியான எம்.எஸ்.டோனி தி அன்டோல்ட் ஸ்டோரி திரைப்படத்தில் ரசிகர்கள் இப்போதும் பார்க்கலாம்.

தோனியின் அந்த நண்பர் ராஞ்சியில் பிரைம் ஸ்போர்ட்ஸ் எனும் விளையாட்டு உபகரணங்கள் கடையை நடத்தி வருகிறார்.

எனவே தன்னுடைய துடுப்புக்கு முதல் முறையாக ஸ்பான்சர்ஷிப்பை பெற்றுக் கொடுத்த பரம்ஜித் செய்த உதவியை மறக்காத டோனி தற்போது அவருடைய கடையை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் அந்த ஸ்டிக்கரை தன்னுடைய துடுப்பில் ஒட்டி பயிற்சி செய்கிறார்.






இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 08.02.2024 அன்று வெளியிடப்பட்டது.